# நடப்பு நிகழ்வுகள் மார்ச் 25.03.2018

- ஹெலனிக் ஸ்பேஸ் ஏஜென்சி (Hellenic Space Agency) என்ற பெயரில் கிரேக்க நாடு தனது முதல் விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தை துவங்கியுள்ளது.
- புதிய "நீர்தாண்டி" (Water Strider) உயிரினம் கண்டுபிடிப்பு: இந்திய விலங்கியல் சர்வே (Zoological Survey of India, ZSI) அமைப்பு நாகாலாந்தின் இண்டான்சி ஆற்றிலிருந்து, 'பிலோமிரா நாகாலாந்தா ஜெஹாமலர் மற்றும் சந்திரா' (Ptliomera Nagalanda Jehamalar and Chnadra) எனும் புதிய நீர்தாண்டி வகையிலான உயிரினம் கண்டுபிடித்துள்ளது.
- பரம்வீரக் சக்ரா விருது வென்றவர்கள் பற்றிய 'பரம்வீர் பர்வானே' (Paramveer Parwane) என்ற புத்தகத்தை இந்திய ராணுவம் வெளியிட்டுள்ளது. இதனை Dr.பிரபாகர் ஜெயின் எழுதி வெளியிட்டுள்ளார்.
- 'தேசிய உயர்கல்வித் திட்டத்தை' (Rashtriya Uchchatar Shiksha Abiyan (RUSA) National Higher Education Mission.) 31.03.2030 வரையிலான காலக்கட்டத்திற்கு தொடருவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் - தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்திற்கு '(Ayushman Bharat National Health Protection Mission (AB-NHPM)' மத்திய கேபினட் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கர்நாடகா மாநிலத்திலுள்ள 'பாரிவாரா' (Parivara) மற்றும் 'தலவாரா' (Talawaraio) ஆகிய ஜாதிகளை மலைவாழ் இனத்தவர் பட்டியலில் மத்திய ரகாபினட் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ∴போஷன் அபியான் (Poshanu Abhiyan) எனப்படுவது சத்துக்குறைபாட்டுக்குத் தீர்வுகளை ஊட்டச்சத்துப் பிரசாரம் ஆகும். இதற்கு 3046.15 கோடியை ஒதுக்கியுள்ளது.
- 106-வது இந்திய அறிவியல் மாநாடு 2019-ம் ஆண்டு ஜனவரி 3-ம் தேதி முதல்7-ம் தேதி வரை போபால் பர்க்கத்துல்லா பல்கலைக்கழகத்தில் நடைபெறும். (Future India: Science and Technology)
- ஜார்கண்ட் மாநிலம் தியோகார் (Deoghar) மாவட்டத்தில் 'பிளாஸ்டிக் பூங்கா' (Plasic Park) அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- தேசியக் கலாச்சார ஒலி ஒளி காப்பகம் (National Cultural Audiovisual Archievies) (NCAA) உலகின் முதல் நம்பகத் தன்மை வாய்ந்த மின்னனுக் களஞ்சியமாக உருவாகியுள்ளது.
- பத்திரிக்கையாளர் நலத்திட்டக் குழுவையும் மத்திய பத்திரிக்கையாளர் அங்கீகாரக் குழுவையும் மத்திய தகவல் மற்றும் ஒலிப்பரப்புத் துறை அமைச்சகம் மாற்றியது.
- இந்திய இரயில்வேயின் நிறுவனம் IRCTC – Indian Railway Catering and Tourism Corporation நிறுவனம் 'ஓலா கேப்ஸ்' (Ola Cabs) நிறுவனத்துடன் MOU செய்துள்ளது.